மசேநி லைஃப் - வாழ்நாள் முழுவதும் மாதாந்திர வழங்கீடு

# உங்கள் மசேநி லைஃப் திட்டத்தை புரிந்துகொள்ள

CENTRAL PROVIDENT FUND BOARD SINGAPORE

# மசேநி லை.ஃ.ப் பற்றிய தகவல் புத்தகம்

மசேநி லை.ஃ.ப்-யில் சேர்வது நீங்கள் உயிர் வாழும் வரையில் மாதாந்திர வழங்கீடு பெருவதை உறுதி செய்கிறது. தயவுசெய்து இந்த புத்தகத்தை கவனத்துடன் படியுங்கள் ஏனென்றால் மசேநி லை.ஃ.ப் திட்டம் எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பற்றி இது விவரிக்கிறது.

1. **அறிமுகம்**
   - 1.1 மசேநி லை.ஃ.ப் என்றால் என்ன?
   - 1.2 நான் ஏன் மசேநி லை.ஃ.ப்-யில் சேர வேண்டும்?
   - 1.3 4 மசேநி லை.ஃ.ப் திட்டங்கள்

2. **மசேநி லை.ஃ.ப்-யில் சேருதல்**
   - **2.1 நான் மசேநி லை.ஃ.ப்-யில் சேரும் போது**
     - 2.1.1 நான் இதில் சேரும் போது என்ன நடக்கும்?
     - 2.1.2 மசேநி லை.ஃ.ப்-க்காக பயன்படுத்தப்படும் என்னுடைய சேமிப்புகளுக்கு வட்டி தொடர்ந்து வழங்கப்படுமா?
     - 2.1.3 சேர்ந்த பிறகு என்னுடைய திட்டத்தை என்னால் மாற்றிக்கொள்ள முடியுமா?
     - 2.1.4 என்னுடைய சொத்தை இப்போதும் என்னால் அடமானம் வைக்க முடியுமா?

   - **2.2 என்னுடைய குறைந்தபட்சத் தொகையை மீட்கத் தொடங்கும் வயதை (DDA) நான் அடையும் போது**
     - 2.2.1 என்னுடைய DDA க்கு 1-2 மாதங்களுக்கு முன்னர் என்ன நடக்கும்?

   - **2.3 என்னுடைய குறைந்தபட்சத் தொகையை மீட்கத் தொடங்கும் வயதை (DDA) நான் கடக்கும் போது**
     - 2.3.1 என்னுடைய DDA க்குப் பிறகு நான் என்னுடைய RA யில் கூடுதல தொகைகளை பெற்றால் என்ன நடக்கும்?

3. **மசேநி லை.ஃ.ப்-யினால் பலனடைதல்**
   - **3.1 மசேநி லை.ஃ.ப் போனஸ் (எல்-போனஸ்)**
     - 3.1.1 நான் எவ்வளவு எல்-போனஸ் தொகையைப் பெற முடியும்?
     - 3.1.2 நான் எப்படி முழு எல்-போனஸ் தொகையைப் பெறுவது.

3.2 **மசேநி லை.ஃ.ப் வழங்கீடுகள்**
3.2.1 என்னுடைய மாதாந்திர வழங்கீடுகளை நான் எப்போதிலிருந்து பெறத் துவங்குவேன்?
3.2.3 என்னுடைய மாதாந்திர வழங்கீடுகளை நான் எவ்வாறு பெறுவேன்?
3.2.3 மாதாந்திர வழங்கீடு நிலையானதா?
3.2.4 கடன் கொடுத்தவர்களிடமிருந்து மாதாந்திர வழங்கீடுகள பாதுகாக்கப்படுகிறதா?
3.2.5 அதிக வழங்கீடுகளை நான் எவ்வாறு பெற முடியும்?
3.2.6 மாதாந்திர வழங்கீடு எப்போது நிறுத்தப்படும்?

4. **மசேநி லை.ஃ.ப்-யில் இருந்து விலகுதல்**
4.1 **நான் இறந்துவிட்டால்**
4.1.1 இறப்பைத் தொடர்ந்து என்ன நடக்கும்?
4.1.2 வாரிசுத் தொகை என்றால் என்ன?

4.2 **மசேநி லை.ஃ.ப்-யில் இருந்து வெளியாகுதல்**
4.2.1 சேர்ந்ததற்குப் பிறகு என்னால் விலகிக்கொள்ள முடியுமா?

5. **உங்களுக்கு ஏற்படக்கூடிய மற்ற கேள்விகள்**
5.1 மசேநி லை.ஃ.ப் திட்டத்தில் என்னுடைய குடும்ப உறுப்பினர்கள் சேர்வதற்கு என்னால் உதவ முடியுமா?
5.2 மசேநி லை.ஃ.ப் திட்டத்தில் பயன்படுத்த அதிகபட்ச தெகை உள்ளதா?

**பின்னிணைப்பு** மசேநி லை.ஃ.ப்-யில் பயன்படுத்தப்படும் சொற்களின் அர்த்தம்

# அறிமுகம்

வாழ்நாள் முழுவதும் நீடிக்கக்கூடிய சேமிப்புகளை உருவாக்குதல் என்ற கருத்தை பிரதமர் லீ சியன் லூங் தனது 2007 யில் நடந்த தேசிய தின கூட்ட உரையில் முதலில் அறிவித்தார். இதுதான் மசேநி லை.ஃ.ப்-யின் தொடக்கம்.

தற்போது ஆயுள் காலம் அதிகரித்து வருவதால், 2030குள் 5தில் 1 சிங்கப்பூரர் 65 வயது உடையவராக இருப்பார் என எதிர்ப்பார்க்கப்படுகிறது அவர்களில் பாதிபேர் 85க்கு மேல் உயிர்வாழ்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகையால் தங்களுடைய அடிப்படை ஓய்வுகால தேவைகளை எதிர்கொள்ள வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் ஓர் வருமானம் இருப்பது கட்டாயமாகிரது.

தற்போதைய குறைந்தபட்சத் தொகை திட்டம் (MSS) மசேநி உறுப்பினர்களுக்கு ஓய்வுகாலத்தின் போது மாதாந்திர வருமானம் ஒன்றை வழங்குகிறது. எனினும், இது சுமார் 20 வருடங்களுக்கு மட்டுமே நீடிக்கும். இதர்க்கு மாறாக மசேநி லை.ஃ.ப் நிங்கள் உயர்வாழும் வரையில் மாதந்திர வருமானம் பெருவதை உறுதிசெய்கிறது.

## 1.1 மசேநி லை.ஃ.ப் என்றால் என்ன?

வயதானவர்களுக்கான மசேநி வாழ்நாள் வருமானத் திட்டமானது (CPF LIFE) உங்களுடைய மீட்கத் தொடங்கும் வயது (DDA) தொடங்கியதிலிருந்து மாதாந்திர வழங்கீடு ஒன்றை நீங்கள் உயிர் வாழும் வரையில் அளித்திடும்.

## 1.2 நான் ஏன் மசேநி லை.ஃ.ப்-யில் சேர வேண்டும்?

மசேநி லை.ஃ.ப் உங்களுடைய மீட்கத் தொடங்கும் வயது (DDA) தொடங்குவதிலிருந்து மாதாந்திர வழங்கீடு ஒன்றை உங்கள் வாழ்நாள் முழுவதும் அளித்திடும். சுமார் 20 வருடங்களுக்கு மட்டுமே நீடிக்கும் வழங்கீடுகளைக் கொண்ட தற்போதைய குறைந்தபட்சத் தொகை திட்டத்தை (MSS) இது மேம்படுத்துகிறது.

## 1.3 4 மசேறி லை∴ப் திட்டங்கள்

மசேறி லை∴ப்பின் கீழ் 4 லை∴ப் திட்டங்கள் உள்ளன. அவற்றில் 3 திருப்புத்தொகையுடனான திட்டங்கள். ஒவ்வொரு திட்டமும் மாதாந்திர வழங்கீடு மற்றும் வாரிசுத்தொகைக்கு இடையே வெவ்வேறு இணைவுகளை அளிக்கின்றன.

கீழேயுள்ள அட்டவணையை காணுங்கள்:

| திருப்புத்தொகையுடனான திட்டங்கள் | மாதாந்திர வழங்கீடு | வாரிசுத்தொகை[1] |
|---|---|---|
| லை∴ப் கூடுதல் அளவு திட்டம் | அதிகம் | குறைவு |
| லை∴ப் சமநிலைத் திட்டம் | நடுத்தரம் | நடுத்தரம் |
| லை∴ப் அடிப்படைத் திட்டம் | குறைவு | அதிகம் |

| திருப்புத்தொகை அளிக்காத் திட்டம் | மாதாந்திர வழங்கீடு | வாரிசுத்தொகை |
|---|---|---|
| லை∴ப் வருமானத் திட்டம் | அதிகபட்சம் | வாரிசுத்தொகை[2] இல்லை |

[1] மசேறி லை∴ப்-யில் சேர்வதற்கு பயன்படுத்தப்பட்ட சேமிப்புகள் முழுவதும் மாதாந்திர வழங்கீடுகளாக வழங்கப்பட்டுவிட்ட பிறகு ஒருவர் இறந்துவிட்டால் வாரிசுத்தொகை எதுவும் இருக்காது.

[2] வாரிசுத்தொகை இல்லை என்றால் எந்த வழங்கீடும் அளிக்கப்படுவதற்கு முன்பே உறுப்பினர் ஒருவர் இறக்க நேர்ந்தாலும் கூட அவரின் வாரிசுகளுக்கு **திருப்புத்தொகை எதுவும் வழங்கப்படாது.**

## மசேநி லை.ஃ.ப்-யில் சேருதல்

மசேநி லை.ஃ.ப் திட்டம் இரண்டு பாகங்களை உள்ளடக்கியது - உங்களுடைய ஓய்வுகால கணக்கு (RA) சேமிப்புகள் மற்றும் ஆண்டுத்தொகை. உங்களுடைய குறைந்தபட்சத் தொகையை மீட்கத் தொடங்கும் வயதிலிருந்து (DDA)[3] வழங்கீடுகள் தொடங்கும்.

### 2.1 நான் மசேநி லை.ஃ.ப்-யில் சேரும் போது

#### 2.1.1 நான் சேரும் போது என்ன நடக்கும்?

நீங்கள் மசேநி லை.ஃ.ப்-யில் சேரும் போது, உங்களுடைய அனைத்து ஓய்வுகால சேமிப்புகளும்[4] உங்களுடைய லை.ஃ.ப் திட்டத்திற்காக பயன்படுத்தப்படும். தனியாக ஒதுக்கி வைக்கப்படும் உங்கள் RA சேமிப்புகளில் பகுதியளவு அல்லது முழுத் தொகையும் கழிக்கப்பட்டு ஆண்டுத்தொகைக்கான (ஆண்டுத்தொகை பிரீமியம் (Premium) என்றழைக்கப்படும்) பிரீமியம் செலுத்துவதற்கு பயன்படுத்தப்படும்.

**உங்களுடைய லை.ஃ.ப் திட்டத்தை பொறுத்தில்லாமல், உங்கள் RA யில் மீதம் உள்ள தொகையும் ஆண்டுத்தொகையும் உங்களுக்கு மாதாந்திர வழங்கீடுகளை உங்களுடைய DDA தொடங்குவதிலிருந்து அளித்திடும்.**

கீழேயுள்ள அட்டவணையை காணுங்கள்:

| | **திருப்புத்தொகையுடனான திட்டங்கள்** | | | **திருப்புத்தொகை அளிக்காத் திட்டம்** |
|---|---|---|---|---|
| **எப்போதிலிருந்து மாதாந்திர வழங்கீடு தொடங்குகிறது:** | **லை.ஃ.ப் கூடுதல் அளவு திட்டம்** | **லை.ஃ.ப் சமநிலைத் திட்டம்** | **லை.ஃ.ப் அடிப்படைத் திட்டம்** | **லை.ஃ.ப் வருமானத் திட்டம்** |
| **(1) மீதமுள்ள ஓய்வுகாலக் கணக்கு (RA) சேமிப்புகள்** | பொருந்தாது | DDA யில் இருந்து நீங்கள் 80 வயதை அடைவதற்கு ஒரு மாதத்துக்கு முன் | DDA யில் இருந்து நீங்கள் 90 வயதை அடைவதற்கு ஒரு மாதத்துக்கு முன் | பொருந்தாது |
| **(2) ஆண்டுத் தொகை** | DDA யிலிருந்து வாழ்நாள் முழுதும் | 80 வயதிலிருந்து வாழ்நாள் முழுதும் | 90 வயதிலிருந்து வாழ்நாள் முழுதும் | DDA யிலிருந்து வாழ்நாள் முழுதும் |

[3] நீங்கள் DDA க்குப் பிறகு சேர்கிறீர்கள் எனில், அதற்கடுத்த மாதத்திலிருந்து வழங்கீடுகள் தொடங்கும்.

[4] ஒதுக்கி வைக்க வேண்டிய குறைந்தபட்சத் தொகைக்கு பதிலாக உங்கள் சொத்தை அடமானம் வைத்திருந்தீர்கள் என்றால், அந்த அடமானத் தொகையை மசேநி லை.ஃ.ப்-யில் சேர்வதர்க்கு பயன்படுத்த முடியாது.

வழங்கீடுகள் முதலில் உங்கள் RAயில் மீதம் உள்ள தொகையிலிருந்தும் பிறகு ஆண்டுத்தொகையிலிருந்தும் வழங்கப்படும். உங்களுடைய RA யிலிருந்து அளிக்கப்படும் வழங்கீடுகளும் ஆண்டுத்தொகையிலிருந்து அளிக்கப்படும் வழங்கீடுகளும் ஏறக்குறைய ஒரே அளவில் தான் இருக்கும்[5].

உங்களுடைய ஓய்வுகாலக் கணக்கிலிருந்து அளிக்கப்படும் வழங்கீடுகளும் ஆண்டுத் தொகையிலிருந்து அளிக்கப்படும் வழங்கீடுகளும் ஒரே அளவில் இருப்பதை உறுதிசெய்வதற்கு, நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள லை∴ப் திட்டத்தின் அடிப்படையில் உங்கள் ஓய்வுகாலக் கணக்கிலிருந்து கழிக்கப்பட வேண்டிய ஆண்டுத்தொகை பிரீமியத்தை வாரியம் கணக்கிடும். உங்கள் பாலினம் மற்றும் சேரும் வயது ஆகியவை ஆண்டுத்தொகை பிரீமியத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும். உங்களுடைய ஓய்வுகாலக் கணக்கிலிருந்து கழித்துக்கொள்ளப்படும் ஆண்டுத்தொகை பிரீமியத்தின் சரியான தொகை குறித்து உங்களுடைய லை∴ப் திட்டம் வழங்கப்படும் வேளையில் உங்களுக்கு தெரிவிக்கப்படும்.

www.cpf.gov.sg யில் உள்ள மசேநி லை∴ப் வழங்கீட்டுப் பொறி, ஒவ்வொரு லை∴ப் திட்டத்திர்க்கும் நீங்கள் ஒதுக்கிவைக்கவேண்டிய ஆண்டு பிரியமம் தொகையை கணக்கிட உதவும்.

[5] உங்கள் சொத்தை அடமானம் வைத்துவிட்டு உங்களுடைய RA சேமிப்புகளில் ஒரு பகுதியை நீங்கள் திரும்ப எடுத்துக்கொள்வது போன்ற விலக்களிப்புகள் இருக்கக்கூடும். "என்னுடைய சொத்தை இப்போதும் என்னால் அடமானம் வைக்க முடியுமா?" என்ற கேள்வியை காண்க.

உதாரணம் : நீங்கள் 55 வயதான ஒரு ஆணாக இருந்து லை.ஃ.ப் கூடுதல் அளவு திட்டத்தை தேர்ந்தெடுப்பவராக இருந்தால், உங்களுடைய RA சேமிப்புகளில் 100% தொகை ஆண்டுத் தொகையை வாங்குவதற்காக கழித்துக்கொள்ளப்படும். ஒவ்வொரு லை.ஃ.ப் திட்டங்களுக்கான தோராயமான தொகைகள்[6] கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | திருப்புத்தொகையுடனான திட்டங்கள் | | | திருப்புத்தொகை அளிக்காத் திட்டம் |
|---|---|---|---|---|
| | லை.ஃ.ப் கூடுதல் அளவு திட்டம் | லை.ஃ.ப் சமநிலைத் திட்டம் | லை.ஃ.ப் அடிப்படைத் திட்டம் | லை.ஃ.ப் வருமானத் திட்டம் |
| **மீதமுள்ள RA சேமிப்புகள்** | 0% | 70% | 90% | 0% |
| **ஆண்டுத்தொகை பிரீமியம்** | 100% | 30% | 10% | 100% |

இதை கீழே காட்டப்பட்டுள்ள எழுத்து வரைவுப்படம் விளக்குகிறது:

கூடுதல் அளவு




[6] மசேநி வாரியம் உங்கள் மசேநி லை.ஃ.ப் பாலிசியை வழங்கும் வேளையில் சரியான பிரீமியத்தை உங்களுக்குத் தெரிவிக்கும்.

| | |
|---|---|
| சமநிலை |  |
| அடிப்படை |  |





| | |
|---|---|
| வருமானம் |  |

### 2.1.2 மசேநி லை.ஃ.ப்-க்காக பயன்படுத்தப்படும் என்னுடைய சேமிப்புகளுக்கு வட்டி தொடர்ந்து வழங்கப்படுமா?

ஆம். RA சேமிப்புகளின் மீது ஈட்டப்படும் வட்டியானது RA கணக்கில் தொடர்ந்து செலுத்தப்படும். ஆண்டுத்தொகை பிரீமியத்தின் மீது ஈட்டப்படும் வட்டியானது வாழ்நாள் வருமான நிதியில் செலுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் மற்ற மசேநி லை.ஃ.ப் பங்கேற்பாளர்களால் செலுத்தப்படும் ஆண்டுத்தொகை பிரீமியங்களில் இருந்து ஈட்டப்படும் வட்டியானது வாழ்நாள் முழுவதும் வழங்கீட்டை அளிப்பதற்காக ஒன்று திரட்டப்படும்.

மேலும், உங்கள் RAயில் இருந்து கழித்துக்கொள்ளப்பட்ட (வழங்கீடுகள் கழித்து கெள்ளப்பட்ட ஆண்டுத்தொகை பிரீமியம் உட்பட) ஒன்றுசேர்க்கப்பட்ட மசேநி மீதத் தொகைகளின்[7] முதல் $60,000யின் மீது 1% கூடுதல் வட்டியை நீங்கள் பெறுவீர்கள். இந்த கூடுதல் வட்டியானது உங்களுடைய RA[8] யில் செலுத்தப்படும்.

### 2.1.3 சேர்ந்த பிறகு என்னுடைய திட்டத்தை என்னால் மாற்றிக்கொள் முடியுமா?

முடியாது, மசேநி லை.ஃ.ப் பங்கேற்பாளர் என்ற வகையில், நீங்கள் உங்கள் திட்டத்தை மாற்றினால் அத்திட்டத்தில் ஏற்கனவே உள்ள மற்ற உறுப்பினர்களை பாதித்திடும்.

---

[7] உங்களுடைய சாதாரணக் கணக்கிலிருந்து $20,000 வரையிலான தொகையுடன்.

[8] மெடிசேவ் கணக்கில் உள்ள மீதத்தொகைகளின் மீது ஈட்டப்படும் வருமானம் தவிர, ஏனென்றால் அது மெடிசேவ் கணக்கில் வரவுவைக்கப்படும்.

## 2.14 என்னுடைய சொத்தை இப்போதும் என்னால் அடமானம் வைக்க முடியுமா?

ஏற்கனவே உள்ள மசேநி விதிகள் உங்கள் சொத்தை நீங்கள் அடமானம் வைப்பதற்கும் உங்கள் RA சேமிப்புகளின் ஒரு பகுதியை நீங்கள் திரும்ப எடுத்துக்கொள்வதற்கும் அனுமதிக்கின்றன. நீங்கள் லை∴ப் சமநிலைத் திட்டத்தை அல்லது லை∴ப் அடிப்படைத் திட்டத்தை தேர்ந்தெடுத்திருந்தால், சொத்தை அடமானம் வைப்பதற்கும் உங்கள் RA சேமிப்புகளின் ஒரு பகுதியை திரும்ப எடுத்துக்கொள்வதற்குமான போதிய RA சேமிப்புகளை உங்கள் கணக்கில் நீங்கள் கொண்டிருக்கக்கூடும். ஆனால் இதன் விளைவாக உங்களுடைய RA யில் இருந்து அளிக்கப்படும் மாதாந்திர வழங்கீடு குறைக்கப்படலாம்[9] மற்றும் ஆண்டுத்தொகை வழங்கீடு தொடங்கும் வயதுக்கு முன்பே உங்கள் RA வெறுமையாகிவிடலாம.

நீங்கள் லை∴ப் கூடுதல் திட்டத்திலோ அல்லது லை∴ப் வருமானத் திட்டத்திலோ இருக்கிறீர்கள் என்றால், உங்களுடைய அனைத்து RA சேமிப்புகளும் ஆண்டுத்தொகை பிரீமியத்திற்காக பயன்படுத்தப்படும். ஆகையால், சொத்தை நீங்கள் அடமானம் வைத்தாலும்கூட உங்களால் RA சேமிப்புகள் எதையும் திரும்ப எடுக்க இயலாது.

---

[9] எனினும், ஆண்டுத்தொகை வழங்கீடு தொடங்கும் வயதிலிருந்து தொடங்கப்பெறும் உங்கள் ஆண்டுத்தொகையிலிருந்து வழங்கப்படும் மாதாந்திர வழங்கீடானது பாதிக்கப்படாது.

## 2.2 என்னுடைய குறைந்தபட்ச தொகையை மீட்கத் தொடங்கும் வயதை (DDA)[10] நான் அடையும் போது

### 2.2.1 என்னுடைய DDA க்கு 1-2 மாதங்களுக்கு முன்னர் என்ன நடக்கும்?

நீங்கள் மசேநி லை.ீ.ப்-யில் சேரும் காலம் முதல் நீங்கள் குறைந்தபட்ச தொகையை மீட்கத் தொடங்கும் வயதை (DDA) அடையும் வரையில், உங்களுடைய ஒன்றிணைக்கப்பட்ட மசேநி மீதத் தொகைகளின்[11] (நீங்கள் மசேநி லை.ீ.ப்-யில் சேரும் வேளையில் ஆண்டுத்தொகை பிரீமியமாக கழித்துக்கொள்ளப்படும் சேமிப்புகள் உள்பட) முதல் $60,000 மீது ஈட்டப்படும் கூடுதல் 1% வட்டியானது உங்களுடைய ஓய்வுகால கணக்கில் (RA) வரவு வைக்கப்படும். கூடுதல் செலுத்துத் தொகைகளில் இருந்து அல்லது உங்கள் சொத்து விற்பனை மூலம் திரும்பப் பெறும் தொகைகளில் இருந்து பெறப்படும் கூடுதல் தொகைகள் கூட உங்கள் ஓய்வுகாலக் கணக்கில் வரவு வைக்கப்படலாம்.

உங்களுடைய DDA க்கு சுமார் 1-2 மாதங்களுக்கு முன்னர், நீங்கள் தேர்ந்தெடுத்த லை.ீ.ப் திட்டத்திற்காக[12] மற்றொரு ஆண்டுத்தொகை பிரீமியத்தை மசேநி வாரியம் இத்தகைய கூடுதல் பணத்திலிருந்து கழித்துக்கொள்ளும்.

---

[10] உங்களுடைய DDA க்கு முன்னதாக நீங்கள் இத்திட்டத்தில் சேர்ந்தால் மட்டுமே இந்தப் பிரிவு பொருந்தும்.

[11] $20,000 வரையிலான தொகை உங்களுடைய சாதாரணக் கணக்கு (OA) சேமிப்புகளில் இருந்து பெறப்படும்.

[12] உங்களுடைய ஆரம்ப RA சேமிப்புகள் பிரிக்கப்பட்ட முறையைப் போன்றே இத்தகைய கூடுதல் தொகைகளும் பிரிக்கப்படும். இந்த தொகையானது DDA க்கு முன்னர் உங்கள் RA யில் புதிதாக சேர்ந்த ஏதேனும் தொகையையும் உள்ளிடும்.

## 2.3 என்னுடைய DDA யை கடந்தவுடன்

### 2.3.1 என்னுடைய DDA க்குப் பிறகு நான் என்னுடைய RA யில் கூடுதல் தொகைகளைப் பெற்றால் என்ன நடக்கும்?

உங்களுடைய DDA க்குப் பிறகு உங்கள் RA யில் நீங்கள் கூடுதல் தொகைகளை பெற்றால் (உதாரணத்திற்கு கூடுதல் செலுத்துத் தொகைகள் அல்லது சொத்து திருப்புத்தொகையில் இருந்து), அவை உங்களுடைய RA மாதாந்திர வழங்கீடுகளின் பகுதியாக வழங்கப்படும். இது உங்கள் RA யில் இருந்து அளிக்கப்படும் மாதாந்திர வழங்கீடுகளுக்கும் உங்கள் ஆண்டுத் தொகையில் இருந்து அளிக்கப்படும் மாதாந்திர வழங்கீடுகளுக்கும் இடையே வேறுபாட்டை விளைவித்திடலாம்.

உங்களுடைய RA மற்றும் ஆண்டுத் தொகையிலிருந்து கிடைக்கப்பெறும் மாதாந்திர வழங்கீடுகள் ஒரே அளவில் இருப்பதற்கு நீங்கள் மற்றொரு ஆண்டுத் தொகையையும் வாங்க விரும்பினால், தயவுசெய்து மசேநி வாரியத்திடம் தெரிவிக்கவும். இதனை செய்திட நீங்கள் www.cpf.gov.sg எனும் எங்கள் இணையத்தளத்தின் வழியாக விண்ணப்ப படிவம் ஒன்றை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்த படிவத்தை எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

## மசேநி லை.ஃ.ப்-யினால் பலனடைதல்

### 3.1 லை.ஃ.ப் போனஸ் (எல்-போனஸ்)

#### 3.1.1 நான் எவ்வளவு எல்-போனஸ் தொகையைப் பெற முடியும்?

உங்கள் RA கணக்கில் குறைந்தபட்சமாக $20,000 யுடன் நீங்கள் மசேநி லை.ஃ.ப்-யில் சேரும் போது $2,200 முதல் $4,000 வரையிலான எல்-போனஸை நீங்கள் பெற முடியும். எல்-போனஸ் உங்களுடைய மசேநி லை.ஃ.ப் திட்டம் அளிக்க பட்ட ஆண்டுக்கு முந்தைய ஆண்டின் மதிப்பீடு செய்யத்தக்க வருடாந்திர வருமானம் (AI) [13] மற்றும் உங்கள் சொத்தின் வருடாந்திர மதிப்பு (AV)[14] ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப் படுகிறது.

உங்கள் RA கணக்கில் குறைந்தது $20,000 வைத்திருந்தால், நீங்கள் பெறக்கூடிய தொகை கீழேயுள்ள அட்டவணையில்[15] காட்டப்பட்டுள்ளது:

| சொத்தின் AV / AI | $7,000 அல்லது குறைவாக | $7,000 க்கு மற்றும் $13,000 வரையில் |
|---|---|---|
| $27,000 அல்லது குறைவாக | $4,000 | $3,200 |
| $27,000 க்கு மற்றும் $60,000 வரையில் | $3,200 | $2,200 |

உங்கள் RA கணக்கில் நீங்கள் $20,000 க்கும் குறைவான தொகையை வைத்திருந்தால், இத்திட்டத்தில் சேரும் போது நீங்கள் குறிப்பிட்ட விகிதத்தின் அடிப்படையில் (pro-rata) கணக்கிடப்பட்ட எல்-போனஸைப் பெறுவீர்கள்.

உதாரணம்: AV $7,000 அல்லது அதற்கு குறைவாகவும் AI $27,000 அல்லது அதற்கு குறைவாகவும் இருந்து உங்கள் RA கணக்கில் $10,000 உடன் நீங்கள் மசேநி லை.ஃ.ப்-யில் சேர்கிறீர்கள் என்றால், நீங்கள் $2,000 ஐ எல்-போனஸாக பெறுவீர்கள்.

---

[13] உங்கள் வருடாந்திர வருமானம் (AI) உங்களுடைய மசேநி லை.ஃ.ப் திட்டம் அளிக்க பட்ட ஆண்டுக்கு முந்தைய வரிவிதிப்பு ஆண்டின் (YA) அடிப்படையிலானது. (உதாரணம்: உங்களுடைய மசேநி லை.ஃ.ப் திட்டம் 2012ல் அளிக்கப்பட்டால், உங்கள் YA 2011 க்கான AI பயன்படுத்தப்படும், அதாவது உங்களுடைய 2010 க்கான வருமானம்).

[14] உங்கள் எல்-போனஸ் தகுதியை தீர்மானிக்க பயன்படுத்தப்படும் உங்கள் வீட்டின் வருடாந்திர மதிப்பு (AV) உங்கள் NRIC முகவரியின் அடிப்படையில் உங்களுடைய மசேநி லை.ஃ.ப் திட்டம் அளிக்க பட்ட ஆண்டுக்கு முந்தைய ஆண்டில் அன்று மதிப்பீடு செய்யப்பட்ட மதிப்பாகும். (உதாரணம்: உங்களுடைய மசேநி லை.ஃ.ப் திட்டம் 2012ல் அளிக்கப்பட்டால், உங்கள் NRIC முகவரியின் அடிப்படையில 31 டிசம்பர் 2011 க்கான AV யின் மதிப்பு பயன்படுத்தப்படும்).

[15] 2012ல் மசேநி லை.ஃ.ப் திட்டம் அளிக்கப்பட்டது என எடுத்துக்கொண்டால்.. அடுத்து வரும் ஆண்டுகளுக்கான சமீபத்திய AV/AI கட்டளை விதிக்கு www.cpf.gov.sg ஐ காண்க.

### 3.1.2 நான் முழு எல்-போனஸ் தொகையைப் எப்படி பெற முடியும்?

முழு எல்-போனஸ் தொகையைப் பெற, உங்கள் RA கணக்கில் தொகை கூட்டல் செய்து, அந்தத் தொகையை 56 வயதை அடைவதற்க்கு முன்னதாக லைஃப்-யில் ஒப்புவிப்பதன் மூலம் அதனை பெறலாம் :

நீங்கள் $20,000 க்கும் குறைவான தொகையோடு மசேநி லைஃப்-யில் சேர்கிறீர்கள் என்றால் குறிப்பிட்ட விகிதத்தின் அடிப்படையில் (pro-rata) கணக்கிடப்பட்ட எல்-போனஸைப் பெறுவீர்கள்.

உங்களுக்கு கூடுதலாக கிடைக்கும் எல்-போனஸ் முதன்முதலில் உங்களுக்கு அளிக்கப்பட்டபோது இருந்த உங்கள் வீட்டின் வருடாந்திர மதிப்பு (AV) மற்றும் உங்கள் வருடாந்திர வருமானம் (AI) அடிப்படையில் அச்சமயம் உங்களுக்கு பெருந்தக்குடிய AV/AI கட்டளை விதிக்கு உட்பட்டிருக்கும்.

எல்-போனஸ் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு, தயவுசெய்து www.cpf.gov.sg ஐ பார்வையிடுங்கள்.

## 3.2 மசேநி லை∴ப் வழங்கீடுகள்

### 3.2.1 என்னுடைய மாதாந்திர வழங்கீடுகளை நான் எப்போதிலிருந்து பெறத் துவங்குவேன்?

உங்களுடைய மாதாந்திர வழங்கீடுகள் உங்கள் DDA யிலிருந்து பெறத் துவங்குவீர்கள். மாதந்திர வழங்கீட்டை உங்கள் RA மற்றும் / அல்லது ஆண்டுத்தொகையிலிருந்து உங்களுடைய லை∴ப் திட்டத்தை பொறுத்து பெருவீர்கள்.

உங்கள் RA யில் சேர்க்கப்படும் 1% கூடுதல் வட்டி ஈட்டப்படும் வரையில் உங்கள் DDA க்கு பீறகு உங்கள் மாதந்திர வழங்கீட்டின் ஒரு பகுதியாக வழங்கப்படும். இந்த 1% கூடுதல் வட்டியிலிருந்து கொடுக்கப்படும் வழங்கீடு ஒன்றிணைக்கப்பட்ட மசேநி மீதத் தொகை (வழங்கீடுகள் கழித்து கொள்ளப்பட்ட ஆண்டுத்தொகை பிரீமியம் உட்பட) $60,000 குறைவாகும் போது நாளடைவில் குறைந்திடும்.

### 3.2.2 என்னுடைய மாதாந்திர வழங்கீடுகளை நான் எவ்வாறு பெறுவேன்?

உங்களுடைய மாதாந்திர வழங்கீடுகள் இன்ட-பேங்க் GIRO (IBG) வாயிலாக ஒவ்வொரு மாதமும் 7ஆவது வேலை நாளில் உங்கள் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுவிடும். IBG வாயிலாக அனுப்புவதில் தோல்வி ஏற்பட்டாலோ அல்லது நீங்கள் ஒரு வங்கிக் கணக்கு விவரங்களை அளித்திருக்கவில்லை என்றாலோ, வழங்கீடுகள் உங்களின் மசேநி சாதாரணக் கணிக்கில் வரவு வைக்கப்படும். அதனை பிறகு நீங்கள் நடப்பிலுள்ள மசேநி திரும்பப்பெறுதல் விதிகளுக்கு உட்பட்டு நீங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

### 3.2.3 மாதாந்திர வழங்கீடு நிலையானதா?

இல்லை, மசேநி வட்டி விகிதங்கள் மற்றும் இறப்புவீதம் போன்ற காரணிகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு வருடா வருடம் மாதாந்திர வழங்கீடு சரிசெய்யப்படலாம். வழக்கமாக சரிசெய்தல்கள் சிறிய அளவிலேயே செய்யப்படும் என்பதால் வழங்கீடுகள் நிலையாகவே இருக்கும்.

### 3.2.4 கடன் கொடுத்தவர்களிடமிருந்து மாதாந்திர வழங்கீடுகள் பாதுகாக்கப்படுகிறதா?

ஆம்.

### 3.2.5 அதிக வழங்கீடுகளை நான் எவ்வாறு பெற முடியும்?

உங்களுடைய ஓய்வுகாலத்தில் அதிக வழங்கீட்டை பெற நீங்கள் விரும்பினால், உங்களுடைய RA[16] யில் நீங்கள் ரொக்கம் மற்றும்/அல்லது மசேநி கூடுதல் செலுத்துத் தொகைகளை செலுத்தி அந்தத் கூடுதல் தொகையை மசேநி லை∴ப்-யில் ஒப்புவிக்க வேண்டும்.

உங்களுடைய RA யில் கூடுதல் செலுத்துத் தொகைகளை செலுத்துவது குறித்த கூடுதல் தகவல்களுக்கு www.cpf.gov.sg ஐ பார்க்கவும்.

### 3.2.6 மாதாந்திர வழங்கீடு எப்போது நிறுத்தப்படும்?

நீங்கள் வாழும் காலம் வரையில் மசேநி லை∴ப்-யில் இருந்து மாதாந்திர வழங்கீடு வழங்கப்படும். இறந்தவுடன் வழங்கீடுகள் நிறுத்தப்படும்.

அவ்வப்போது, நீங்கள் உயிருடன் இருப்பதை நிரூபிப்பதற்கான சான்றை வாரியத்திடம் அளிக்க வேண்டிய தேவையுள்ளது. எனவே, தேவைப்படும்போது உங்களுடைய சொந்த ஆவணங்களை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுவீர்கள். அனுப்ப தவறினால் மாதாந்திர வழங்கீடு நிறுத்தப்படும். கேட்கப்பட்ட ஆவணங்களை நீங்கள் அனுப்பியவுடன் வழங்கீட்டுகள் மீண்டும் தொடங்கும்.

[16] விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்.

# மசேநி லைஃப்-யில் இருந்து விலகுதல்

## 4.1 நான் இறந்துவிட்டால்

### 4.1.1 இறப்பைத் தொடர்ந்து என்ன நடக்கும்?

இறப்பைப் தொடர்ந்து மசேநி லைஃப் வழங்கீடு வழங்கப்படுவது நிறுத்தப்படும்.

லைஃப் கூடுதல் அளவு, லைஃப் சமநிலை மற்றும் லைஃப் அடிப்படைத் திட்டங்கள் ஆகிய இம்மூன்று லைஃப் திட்டங்களில் ஏதேனும் ஒன்றில் நீங்கள் இருக்கிறீர்கள் எனில், உங்கள் வாரிசுதாரர்கள் வாரிசுத் தொகையை பெறக்கூடும்.

எனினும், நீங்கள் லைஃப் வருமானத் திட்டத்தில் இருக்கிறீர்கள் எனில், உங்கள் வாரிசுதாரர்கள் எத்தகைய வாரிசுத் தொகையையும் பெற மாட்டார்கள்.

### 4.1.2 வாரிசுத்தொகை என்றால் என்ன?

ஒரு உறுப்பினர் தன் இறப்பிற்குப் பிறகு தன்னுடைய வாரிசுகளுக்கு விட்டுச்செல்கின்ற பணம் தான் வாரிசுத் தொகையாகும். உங்கள் RA யில் மீதம் உள்ள சேமிப்பு ஏதேனும் மற்றும் இறப்பின் போது பயன்படுத்தப்படாத ஆண்டுத்தொகை பிரீமியத்தை[17] யும் இது உள்ளடக்கியிருக்கும்.

இறப்பைத் தொடர்ந்து **லைஃப் கூடுதல் அளவு, லைஃப் சமநிலை** மற்றும் **லைஃப் அடிப்படை** திட்டங்கள் வாரிசுத்தொகையை அளிக்கின்றன. இந்தத் திட்டங்களின் கீழ், வழங்கீட்டுத் தொகை எதுவும் அளிக்கப்படுவதற்கு முன்னரே ஒரு உறுப்பினர் இறந்துவிட்டால், லைஃபில் சேர பயன்படுத்தப்பட்ட சேமிப்புகள் (ஆண்டுத்தொகை பிரீமியம் உட்பட) திரும்ப அளிக்கப்படும். மாதாந்திர வழங்கீடு தொடங்கிய பிறகு அந்த உறுப்பினர் இறந்துவிட்டால், அவர் RA யில் மீதம் உள்ள சேமிப்பு ஏதேனும் மற்றும் இறப்பின் போது பயன்படுத்தப்படாத ஆண்டுத்தொகை பிரீமியம் உட்பட திரும்ப அளிக்கப்படும்.

அவருடைய மசேநி கணக்குக்கு திரும்ப அளிக்கப்படும் ஏதேனும் பயன்படுத்தப்படாத பிரீமியம் தொகையுடன் அவருடைய மசேநி சேமிப்புகளின் மீதத் தொகையும் சேர்த்து அவரால் நியமிக்கப்பட்டவர்களுக்கு[18] அளிக்கப்படும். செல்லத்தக்க நியமனம் இல்லை என்றால், அவருடைய சேமிப்புகள் வாரிசுரிமை சட்டங்களுக்கு இணங்கி பகிர்ந்தளிப்பதற்காக பொது அறக்காப்பாளரிடம் அளிக்கப்படும்.

**எனினும், திருப்பிக் கொடுக்கும் சிறப்பியல்பு இல்லாத மசேநி லைஃப் திட்டம் ஒன்றை, அதாவது லைஃப் வருமானத் திட்டத்தை ஒரு உறுப்பினர் தேர்வு செய்திருந்தால், அவர் இறக்கும் போது மாதாந்திர வழங்கீடுகள் தொடங்கப்பெறவில்லை என்றாலும் கூட வாரிசுத்தொகை எதுவும் வழங்கப்படாது.**

[17] பயன்படுத்தப்படாத ஆண்டுத்தொகை பிரீமியம் என்பது ஆண்டுத்தொகையிலிருந்து நீங்கள் பெற்ற மாதாந்திர வழங்கீடுகளில் கழித்துக்கொண்டு செலுத்தப்பட்ட ஆண்டுத்தொகை பிரீமியமேயாகும்.

[18] நடைமுறையில் உள்ள மசேநி விதிகளுக்குட்பட்டு.

**ஆண்டுத்தொகை பிரீமியத்தில் எதையும் திரும்ப அளித்திடாத ஒரே திட்டம் லை∴ப் வருமானத் திட்டம் தான்.**

கீழேயுள்ள அட்டவணையை காணுங்கள்

| | **திருப்புத்தொகையுடனான திட்டங்கள்** | | | **திருப்புத்தொகை அளிக்காத் திட்டம்** |
|---|---|---|---|---|
| | **லை∴ப் கூடுதல் அளவு திட்டம்** | **லை∴ப் சமநிலைத் திட்டம்** | **லை∴ப் அடிப்படைத் திட்டம்** | **லை∴ப் வருமானத் திட்டம்** |
| **இத்திட்டங்களின் கீழ் வாரிசுத் தொகை எவ்வாறு ஒப்பிடப்படுகிறது?** | குறைவு | நடுத்தரம் | ஆதிகம் | வாரிசுத்தொகை இல்லை |
| **நான் இறக்கும் போது என்னுடைய வாரிசுகளுக்கு நான் எவ்வளவு வாரிசுத்தொகையை விட்டுச்செல்வேன்?** | வாரிசுத்தொகை = உங்கள் RA யில் உள்ள மீதித்தொகைகள், ஏதேனும் இருந்தால் + பயன்படுத்தப்படாத ஆண்டுத்தொகை பிரீமியம். | | | |

நீங்கள் உங்கள் வாரிசுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட வயதுகளில் விட்டுச்செல்கின்ற வாரிசுத்தொகையை மதிப்பீடு செய்ய, www.cpf.gov.sg யில் உள்ள மசேநி லை∴ப் வழங்கீட்டுப் பொறி உதவும்.

## 4.2 மசேநி லை.ஃ.ப்-யில் இருந்து விலகுதல்

### 4.2.1 சேர்ந்ததற்குப் பிறகு என்னால் விலகிக்கொள்ள முடியுமா?

முடியாது, பின்வரும் காரணங்களைத் தவிர்த்து:

அ) குறைந்த ஆயட்காலம் கொண்டிருப்பதற்கான மருத்துவக் காரணம்;
ஆ) மீண்டும் திரும்புவதற்கான எண்ணம் இல்லாமல் சிங்கப்பூர் மற்றும் மேற்கு மலேசியாவில் இருந்து நிரந்தரமாக வெளியேறுதல்.

திருப்புத் தொகை சிறப்பியல்பு[19] கொண்ட 3 மசேநி லை.ஃ.ப் திட்டங்களில் ஏதேனும் ஒன்றில் நீங்கள் இருந்தால், நீங்கள் மசேநி லை.ஃ.ப்-யில் சேர்வதற்கு பயன்படுத்தப்பட்ட சேமிப்புகளில் இருந்து விலகளுக்கு முன்னதாக நீங்கள் பெற்ற ஏதேனும் மாதாந்திர வழங்கீடுகள் கழித்துக்கொள்ளப்பட்டு, தள்ளுபடி செய்யப்பட்ட திருப்புத் தொகை[20] ஒன்றை நீங்கள் பெறுவீர்கள். தள்ளுபடி செய்யப்பட்ட திருப்புத் தொகை பற்றிய கூடுதல் விவரங்களுக்கு, தயவுசெய்து member@cpf.gov.sg க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

எனினும், திருப்புத் தொகை சிறப்பியல்பு இல்லாத திட்டமான லை.ஃ.ப் வருமானத் திட்டத்தில் நீங்கள் இருந்தால், இத்திட்டத்திலிருந்து நீங்கள் விலகினால் எத்தகைய திருப்புத் தொகையையும் நீங்கள் பெற மாட்டீர்கள்.

---

[19] அந்த 3 திருப்புத்தொகையுடனான திட்டங்கள். லை.ஃ.ப் கூடுதல் அளவு திட்டம், லை.ஃ.ப் சமநிலைத் திட்டம் மற்றும் லை.ஃ.ப் அடிப்படைத் திட்டம்.

[20] மசேநி லை.ஃ.ப்-யில் சேர்வதற்கு பயன்படுத்தப்பட்ட சேமிப்புகள் முழுவதும் மாதாந்திர வழங்கீடுகளாக வழங்கப்பட்டுவிட்ட பிறகு திருப்பி கொடுக்கப்பட வேண்டிய தொகை எதுவும் இருக்காது.

## உங்களுக்கு ஏற்படக்கூடிய மற்ற கேள்விகள்

**5.1 மசேநி லைஃப் திட்டத்தில் என்னுடைய குடும்ப உறுப்பினர்கள் சேர்வதற்கு என்னால் உதவ முடியுமா?**

முடியும். உங்களுடைய குடும்ப உறுப்பினர்களின் RA யில் நீங்கள் கூடுதல் செலுத்து தொகைகளை செலுத்தமுடியும். அவ்வாறே உங்கள் குடும்ப உறுப்பினர்களும் உங்கள் கணக்கில் செலுத்த முடியும். மசேநி உறுப்பினர்கள் செலுத்தும் கூடுதல் தொகைகள் ரொக்கமாக இருந்தால் அவர்கள் வரிச் சலுகையைப் பெறக்கூடும்.

ஒரு உறுப்பினருடைய RA யில் நீங்கள் கூடுதல் செலுத்து தொகையை செலுத்துவது குறித்தும் வரிச் சலுகையைப் பெறுவது குறித்தும் மேலும் அதிகத் தகவல்களை அறிந்துகொள்ள தயவுசெய்து www.cpf.gov.sg யை பார்க்கவும்.

**5.2 மசேநி லைஃப்-யில் ஒப்புவிக்கக் கூடிய அதிகபட்சத் தொகை உண்டா?**

ஆம். மசேநி லைஃப்-யில் நீங்கள் ஒப்புவிக்கக் கூடிய அதிகபட்சத் தொகை நடப்பி ளுள்ள குறைந்தபட்சத் தொகை (MS) ஆகும். குறைந்தபட்சத் தொகையை குறித்து மேலும் அறிந்துகொள்ள தயவுசெய்து மசேநி இணையதளத்தை காண்க.

மசேநி லைஃப் பற்றிய கூடுதல் விவரங்களை www.cpf.gov.sg யில் காணலாம். மசேநி லைஃப் தொடர்பான மேலும் விளக்கம் தேவைப்பட்டால், தயவுசெய்து இந்த சிறு புத்தகத்தின் கடைசியில் பட்டியலிடப்பட்டுள்ள தெடர்பு அலைவழிகள் வாயிலாக வாரியத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

## பின்னிணைப்பு: மசேநி லைஃப்-யில் பயன்படுத்தப்படும் சொற்களின் அர்த்தம்

<table>
<tr><td>வாரிசுத் தொகை</td><td>இது இறப்புக்குப் பிறகு வாரிசுகளுக்கு விட்டுச் செல்லும் தொகையாகும். மசேநி லைஃப்-யில் சேர்வதற்கு பயன்படுத்தப்பட்ட சேமிப்புத் தொகைகளில் இருந்து ஏற்கனவே பெற்றுக்கொண்ட மாதாந்திர வழங்கீடுகள் கழிக்கப்பட்டு மீதமுள்ள தொகைகளை இது உள்ளடக்கியிருக்கும்.</td></tr>
<tr><td>வாரிசுதாரர்கள்</td><td>இறப்புக்குப் பிறகு மசேநி சேமிப்புகளைப் பெறுவதற்கு நியமிக்கப்பட்ட நபர்கள் அல்லது மசேநி நியமனத்தை செய்திருக்கவில்லை எனில் வாரிசுரிமை சட்டங்களுடன் இணங்கிய இரத்த உறவினர்கள்.</td></tr>
<tr><td>குறைந்தபட்சத் தொகையை மீட்கத் தொடங்கும் வயது (DDA)</td><td>உங்களுடைய ஓய்வுக் கணக்கிலிருந்து உங்கள் மாதாந்திர வழங்கீடுகளை பெறத் தொடங்கும் வயது.
<table>
<tr><th>பிறந்திருந்த வருடம்</th><th>1943<br>அல்லது அதற்கு முன்னர்</th><th>1944 - 1949</th><th>1950 – 1951</th><th>1952-1953</th><th>1954<br>அல்லது அதற்கு பின்னர்</th></tr>
<tr><td>DDA</td><td>60</td><td>62</td><td>63</td><td>64</td><td>65</td></tr>
</table>
</td></tr>
<tr><td>கூடுதல் வட்டி (EI)</td><td>ஒருவருடைய ஒன்றிணைக்கப்பட்ட மசேநி தொகைகளுடன் (மசேநி லைஃப்-யில் சேர்வதற்கு பயன்படுத்தப்படும் சேமிப்புகள் உள்ளிட்டவை) சாதாரணக் கணக்கிலிருக்கும் (OA) $20,000 வரையிலான தொகையும் சேர்ந்த முதல் $60,000 தொகையானது 1% கூடுதல் வட்டியை ஈட்டுகிறது. ஈட்டப்படும் கூடுதல் வட்டி ஓய்வுக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது (மெடிசேவ் கணக்கில் உள்ள தொகையின் மீது ஈட்டப்படும் வருமானம் தவிர, ஏனென்றால் அது மெடிசேவ் கணக்கில் வரவுவைக்கப்படும்).</td></tr>
<tr><td>குறைந்தபட்சத் தொகை (MS)</td><td>ஓய்வுகாலத் தேவைகளுக்காக 55ஆவது வயதில் ஓய்வுக் கணக்கில் (RA) ஒதுக்கி வைப்பதற்கு தேவைப்படும் தொகை. இது ரொக்கமாகவோ, அல்லது பகுதி ரொக்கமாகவோ மற்றும் பகுதி சொத்து அடமானமாகவோ இருக்கலாம், குறைந்தபட்ச தொகையில் 50% வரையில் சொத்து அடமானமாக வைத்திடலாம். ரொக்கமாக RA யில் ஒதுக்கி வைத்திருக்கும் MS தொகையை மட்டும்தான் மசேநி லைஃப்-யில் சேர உபயோகிக்க முடியும்.</td></tr>
</table>

| | |
|---|---|
| சொத்து அடமானம் | குறைந்தபட்சத் தொகைக்கு பதிலாக ஒருவருடைய சொத்துக்கு ஈடாக நிறுத்திவைக்கப்படும் தொகை. சொத்து அடமானம் குறித்த தகவல்களை அறிந்திட தயவுசெய்து வாரியத்தின் வலைதளத்தை காணுங்கள். |
| ஓய்வுக் கணக்கு (RA) | ஒருவர் 55ஆவது வயதை அடையும் போது, வயதான காலத்தில், ஓய்வுகால வருமானத்தை ஈடுசெய்வதற்கு அமைத்துக் கொடுக்கப்படும் ஒரு தனிநபர் சேமிப்புக் கணக்காகும். |
| இறப்பு வீதம் | பல்வேறு வயதில் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ள மரணம். ஆதிக நபர்கள் நீண்ட காலம் வாழ்ந்தால், இந்த மாதாந்திர வழங்கீடு குறையக்கூடும், அதேபோன்று குறைவான காலம் வாழ்ந்தால் வழங்கீடு அதிகரிக்கக்கூடும். |

**மேல் விவரங்களுக்கு, தயவுசெய்து www.cpf.gov.sg ஐ பார்வையிடுங்கள்**

**மின்னஞ்சல் : member@cpf.gov.sg**

மசேநி தொடர்பு நிலையத்தை அழையுங்கள் : **1800-227-1188 (உள்ளூர்)**

**65-6227-1188 (வெளியூர்)**

குறிப்பு:

இந்தச் சிறு புத்தகம் உங்களுடைய குறிப்புக்கானது மற்றும் இதன் உள்ளடக்கங்கள் மற்றும் தகவல்கள் 1 ஜனவரி 2012 வரையில் சரியானவையாகும். மசேநி லை.ஃ.ப் திட்டம் என்பது மத்திய சேமநிதி சட்டம் (அதிகாரம் 36) மற்றும் அதன்கீழ் துணையாக பயன்படுவதற்கு இயற்றப்படும் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களோடு வாரியத்தால் நேரத்திற்கு நேரம் விதிக்கப்படும் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் முன்னேற்பாடுகளுக்கு உட்பட்ட திட்டமாகும்.